## வகுப்பு - 10

## இயல் - 3

### உரைநடை உலகம்

### விருந்து போற்றுதும் !

**குறுவினா**

**1. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக. (அல்லது ) ஏழ்மையிலும் விருந்தோம்பிய தமிழர் பண்பாட்டை விவரி.**

- விருந்தளிக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது விருந்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் வேண்டும்.
- பணம் இல்லை என்றாலும் எண்ணம் இருந்தால், தன்னிடம் இல்லை என்றாலும் பிறரிடம் கடன் பெற்றாவது விருந்து அளிக்கப்படும். அதற்குப் பணம் முக்கியம் இல்லை எண்ணம்தான் முக்கியம்

**2. புறநானூற்றில் இளம்பெருவழுதியின் கூற்று மரபு என்ன?**

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

**"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்**

**அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்**

**தமியர் உன்ன்டலும் இலரே…"**

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

**3. பழங்காலத்தில் வழியனுப்பும் முறை எவ்வாறு நடைபெற்றது?**

பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர். மேலும்,வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.


Created by Pinkz

**சிறுவினா**

**1. புறநானூறு காட்சிப்படுத்தும் விருந்தோம்பல் யாது? (அல்லது ) இன்மையிலும் விருந்தோம்பும் பண்பு குறித்து எழுதுக.**

- வீட்டிற்கு வந்தவர்க்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர்.
- தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக்குத்திஎடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி, இதனை,

  **குரல்உனக்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து**
  **சிறிது புறப்பட்டன்றோ இவள்**

  என்று புறநானூறு காட்சிப்படுத்துகிறது. நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்.
- இன்றும் விருந்தினர் வந்தால் தன் கருங்கோட்டுச் சீரியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறஎங்கள்து புறநானூறு. இச்செய்தி ,

  **நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தான்**
  **இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்**
  **கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்...**
  என்ற பாடலடிகளில் இடம்பெறுகிறது.

**2. வாழை இலையில் விருந்து பற்றி விவரி.**

- தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதபடுகிறது.
- நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.
- தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்.
- உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும்.
- வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள்.
- இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய்,இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து,அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

Next Generation School

**3. விருந்தோம்பல் அன்றும், இன்றும் எவ்வாறு மாறிஉள்ளது என எழுதுக.**

**அன்று:**

- அன்று புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் தலை வைக்கத் திண்டும் அமைத்துக் கட்டினர்.
- அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்றனர்.
- திருமணம், புதுமனை புகுவிழா போன்ற விழாக்கள் இல்லத்திலே கொண்டாடி விருந்தினர்களை போற்றினர்.
- பண்டைய தமிழர் உள்ளங்களில் விருந்தோம்பல் பண்பும் இல்லங்களில் விருந்தோம்பும் இயல்பும் செழித்திருந்தது.

**இன்று:**

- இன்று புதியவர்களை விருந்தினராக ஏற்பதே இல்லை.
- அனைத்து இல்லம் சார்ந்த விழாக்களும் திருமணக் கூடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர்.
- இன்று அனைத்து இல்லம் சார்ந்த விழாக்களும் விருந்தோம்பல் ஏற்பாட்டலர்களால் செய்யப்படுகிறது.

**நெடுவினா**

**1. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

- எங்கள் இல்லத்திற்கு என் தந்தையின் நண்பர்கள் பொங்கல் திருநாளன்று வந்தனர்.
- நாங்கள் அவர்களை அன்போடு வரவேற்றோம். வந்தவர்களை வாருங்கள் என்று அழைத்து அவர்களுக்குக் குடிக்கத் தண்ணிர் கொடுத்தோம்.
- அவர்களை அமரவைத்து அவர்களிடம் நலம் விசாரித்தும் என் தாய், தந்தையர் பேசிக் கொண்டு இருந்தனர்.
- சிறிது நேரம் கழித்து அவர்கள் குடிக்கப் பழச்சாற்றினைக் கொடுத்தோம்.
- பிறகு அவர்கள் உணவருந்த சுவையான உணவு சமைத்து வைத்திருந்தோம்.
- வந்தவர்களை உணவருந்த அழைத்து வந்து வாழையிலை போட்டு கூட்டு, பொரியல் இனிப்பு, வடை, பாயசம் என்று அறுசுவை உணவைப் படைத்தோம்.
- அவர்கள் உண்டபின் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து இளைப்பாற வைத்தோம்.
- பின் அவர்களுக்கு வீட்டிற்குச் செல்லும் போது அவர்களுக்குப் பரிசுப்பொருள் கொடுத்து வீட்டின் வாசல் வரை சென்று வழி அனுப்பி வைத்தோம்.

# காசிக்காண்டம் ( அதிவீரராம பாண்டியர் )

## (கவிதைப் பேழை)

### குறுவினா

1. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**
   - விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல்
   - நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்
   - முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல்
   - வீட்டிற்குள் வருக, என்று வரவேற்றல்
   - விருந்தினர் எதிரில் நிற்றல்
   - அவர்முன் மனம் மகிழும்படிப் பேசுதல்
   - அவர் அருகிலேயே அமர்ந்துகொள்ளுதல்
   - அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை பின்தொடர்ந்து செல்லல்
   - விருந்தினரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்

ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

### சிறுவினா

1. **காசிக்காண்டம்' நூல் குறிப்பு , ஆசிரியர் குறிப்பு எழுதுக.**
   - காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.
   - துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வியல் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.
   - இல்லொழுக்கங் கூறிய பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர்
   - தமிழ்ப் புலவராகத் திகழ்ந்த இவர் இயற்றிய நூலே காசிக்காண்டம். இவரின் மற்றொரு நூலான வெற்றி வேற்கை என்றழைக்கபடும் நறுந்தொகை சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது.
   - சீவலமாறன் என்ற பட்டப்பெயரும் இவருக்கு உண்டு. நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகியன இவர் இயற்றிய நூல்கள்.

## மலைபடுகடாம் (பெருங்கௌசிகனார்)

### (கவிதைப் பேழை)

**குறுவினா**

***1. இறடிப் பொம்மல் பெறுகுவிர் – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.***

*நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள் .*

***2. தினைச்சோறு விருந்தைப் பற்றி கூறுக.***

- *பண்டையத் தமிழர்கள் பண்பில் மட்டுமின்றி, கலைகளிலும் சிறந்து விளங்கினர்.*
- *கூத்தர், பாணர், விறலியர் போன்ற கலைஞ்சர்கள் ஊர் ஊராகச் சென்று தம் கலைதிறன்களை நிகழ்த்திக்காட்டி மக்களை மகிழ்வித்தனர்.*
- *அவர்களுக்கு மன்னர்களும் வள்ளல்களும் விருந்தோம்பியும் பரிசளித்தும் போற்றினர்.*
- *அவ்வகையாக விருந்தோம்பிய தன்மையைக் காட்சிப்படுதுகிறது தினைசோற்று விருந்து.*

***3. ஆற்றுப்படை என்றல் என்ன?***

*ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து,யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படையாகும்.*

**சிறுவினா**

***1. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?***

- *நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாய் உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல்.*
- *பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள்.*
- *எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்துகொள்ளுங்கள்.*
- *சிவந்த பூக்களை கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.*


Created by Pinkz

- *அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.*
- *அங்குள்ளவர்களிடம்,'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்' என்று சொல்லுங்கள்.*
- *பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்.*
- *நீண்ட வழியைக் கடந்துவந்த உங்களின் துன்பம்தீர இனிய சொற்களைக் கூறுவர். அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.*

***2. மலைபடுகடாம் குறிப்பு எழுதுக.***

- *பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று 'மலைபடுகடாம்' 583 அடிகளைக்கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கபடுகிறது.*
- *மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்க்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.*
- *நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.*

**நெடுவினா**

***1. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.***

- *ஆற்றுப்படுத்தல் என்பது வள்ளலை நாடி எதிர்வருபவர்களை அழைத்து யாம் இவ்விடதேச் சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம்.*
- *நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை ஆகும்.*
- *ஆற்றுப்படுத்தல் என்பது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக இருக்கிறது.*
- *தன்னிடம் இல்லை என்றோ அல்லது தெரியாது என்றோ கூறாமல் யார் வந்தாலும் அவர்களுக்கு வழிகட்டுதலாகவும் இருக்கிறது.*
- *அவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை வழிகாட்டுகின்றனர். அன்றைய ஆற்றுப்படுத்துதல் இன்றைய வழிகாட்டுதலாக மாறியுள்ளது.*

- இது ஒவ்வொரு நிலையிலும் மாற்றம் அடைந்துள்ளது. உதவி தேவைப்படுபவர்களுக்கு பெரும் உதவியாக இருந்து வருகிறது.
- இதுவே இன்றைய ஆற்றுப்படுத்தல் ஆகும்.

## தொகாநிலைத் தொடர்கள்

### சான்று தருக

**1. உயர்திணை**

அ) முத்துநகர் ஆ) திருவள்ளுவர்

இ) பூங்கொத்து ஈ) காசிநகர்

**2. அஃறிணை**

அ) வழுதுணங்காய் ஆ) விறலியர்

இ) ஔவை ஈ) பாணன்

**3. ஆண்பால்**

அ) தலைவி ஆ)கண்ணகி

இ) பாணன் ஈ) மக்கள்

**4. பெண்பால்**

அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர்

இ) மூங்கில்கள் ஈ) விறலியர்

**5. பலர்பால்**

அ) செயங்கொண்டார் ஆ) பவணந்தி

இ) மக்கள் ஈ) வீரன்

**6. பலவின்பால்**

அ) மூங்கில்கள் ஆ) பாணர்கள்

இ) கண்ணகி ஈ) தலைவன்

**7. முன்னிலை**

அ) எம் இல் ஆ) நும் இல்

இ) அவன் இல் ஈ) இவை மூன்றும் அல்ல

**8. மூன்றாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்**

அ) மரம் கட்டினார் ஆ) மரம் வெட்டினார்

இ) தயிர்க்குடம் ஈ) அன்பால் கட்டினார்

***9. இடைச்சொல்***

*அ) மற்றொன்று* | *ஆ) பாடிய*
*இ) வயிரியம்* | *ஈ) படுகர்*

***10. தொகாநிலைத்தொடர்............. .***

*அ)இன்னிசை* | *ஆ) பாதமலர்*
*இ) குயில் கூவியது* | *ஈ) அண்ணன்தம்பி*

***11. எழுவாய்த்தொடர்................ .***

*அ) காவிரி பாய்ந்தது* | *ஆ) கண்ணா வா*
*இ) அன்பால் கட்டினார்* | *ஈ) சாலப்பேசினான்*

***12. விளித்தொடர்.................. .***

*அ) பாடினாள் கண்ணகி* | *ஆ)நண்பா எழுது!*
*இ) வா வா* | *ஈ) எழுதி முடி*

***13. வினைமுற்றுத்தொடர்................. .***

*அ) இனியன் கவிஞர்* | *ஆ)ஆடிய மாதவி*
*இ)ஆடினாள் மாதவி* | *ஈ) மாதவி ஆடினாள்*

***14. பெயரெச்சத்தொடர்............. .***

*அ) கேட்ட பாடல்* | *ஆ)பாடல் கேட்டான்*
*இ)நண்பா எழுது* | *ஈ) பாடினாள் கண்ணகி*

***15. வினையெச்சத்தொடர்................ .***

*அ) மகிழ்ந்தனர்* | *ஆ) பாடினர்*
*இ) பாடினர் மகிழ்ந்தனர்* | *ஈ) பாடி மகிழ்ந்தனர்*

***16. வேற்றுமைத்தொடர்............. .***

*அ) அறிஞருக்குப் பொன்னாடை* | *ஆ) அறிஞர் வந்தார்*
*இ) வந்தார் அறிஞர்* | *ஈ) அறிஞர் எங்கே*

***17. உரிச்சொல் தொடர்.............. .***

*அ)சல சல* | *ஆ) சாலச் சிறந்தது*
*இ) கவிதை எழுது* | *ஈ) நீந்தி வா*

***18. அடுக்குத்தொடர்................ .***

*அ) மட மட* | *ஆ) வருக! வருக!*
*இ) அம்மா வா!* | *ஈ) கல கல*

Pinkz Public School
Next Generation School

**நிரப்புக.**

**1. தொகாநிலைத்தொடர் ................ வகைப்படும்.**

அ) ஏழு ஆ) எட்டு

இ) ஒன்பது ஈ) பத்து

**2. எழுவாயுடன் பெயர், வினை ஆகிய பயனிலைகள் தொடர்வது .............. ஆகும்.**

அ) வினையெச்சத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) எழுவாய்த்தொடர் ஈ) விளித்தொடர்

**3. விளியுடன் வினை தொடர்வது ............... ஆகும்.**

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) விளித்தொடர்

இ) வேற்றுமைத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

**4. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது ............... ஆகும்.**

அ) வினைச்சொல் ஆ) வினையெச்சத்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) முற்றுவினை

**5. முற்றுப்பெறாத வினை, பெயர்ச்சொல்லைத் தொடர்வது ................... எனப்படும்.**

அ) பெயரெச்சத்தொடர் ஆ) பெயர்ச்சொல்

இ) எச்சம் ஈ) வினைத்தொடர்

**6. வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர் ................... தொடர்கள் ஆகும்.**

அ) வேற்றுமைத்தொடர்

ஆ) வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

இ) வேற்றுமைத் தொகாநிலை

ஈ) எதுவுமில்லை

**7. இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது ..................... தொடர் ஆகும்.**

அ) உரிச்சொல் ஆ) பெயர்ச்சொல்

இ) வினைச்சொல் ஈ) இடைச்சொல்

**8. ஒரு சொல் இரண்டு மூன்று அடுக்கித் தொடர்வது ............... ஆகும்.**

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்

இ) தொடர்மொழி ஈ) பொதுமொழி

**9. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ................. .**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

10. **மாணவர்க்கு ஒழுக்கம், மாணவரது ஒழுக்கம் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ................ .**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ)உவம உருபு ஈ) உரிச்சொல்

11. **'கண்ணன் வந்தான்' என்பது ................. .**

அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

12. **'கந்தா வா' என்பது ................. .**

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) வினையெச்சத்தொடர்

இ) விளித்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

13. **' உண்டான் சாத்தன்' என்பது ..................... .**

அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

14. **'கரிய சாத்தன்' என்பது ..................... .**

அ) பெயரெச்சத்தொடர் ஆ) வினையெச்சத்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) இடைச்சொல் தொடர்

15. **'உண்டு வந்தான்' என்பது ................... .**

அ) பெயரெச்சத்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்

இ) உரிச்சொல் தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

16. **'கல்லூரிக்கு சென்றான்' என்பது ..................... .**

அ) வேற்றுமைத்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்

இ) எழுவாய்த்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

17. **'மழைபெய்தும் புழுக்கம் குறையவில்லை' என்ற தொடரில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகை .......................... .**

அ) இடைச்சொல் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்

இ) வேற்றுமைத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

18. **'கடிமணம்'என்பது .................... .**

அ) இடைச்சொல் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்

இ) எழுவாய்த்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

19. **'பழகப் பழகப்' என்பது .................... .**

அ) உரிச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்

இ) அடுக்குத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

**20. கேட்ட பாடல், பாடுவதும் கேட்பதும், வந்தார் கண்ணன் – தொடர் வகைகளை வரிசைப்படுத்துக.**

அ) எண்ணும்மை, பெயரெச்சத்தொடர், வினைமுற்றுத்தொடர்

ஆ) உம்மைத்தொகை, வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர், எண்ணும்மை, வினைமுற்றுத்தொடர்

ஈ) பெயரெச்சத்தொடர், உம்மைத்தொகை, வினைமுற்றுத்தொடர்

**கூறியவாறு செய்க**

**1. மலைந்து (இச்சொல்லின் வினையெச்ச விகுதி எழுதுக)**

அ) து ஆ) உ

இ) இந்து ஈ) இவை மூன்றும் அல்ல

**2. பாடுக (வேர்ச்சொல்லாக மாற்றுக)**

அ) பாடிய ஆ) பாடி

இ) பாடு ஈ) பாடினான்

**3. வாழ்த்து (வினையாலனணயும் பெயராக மாற்றுக)**

அ) வாழ்த்திய ஆ) வாழ்த்தும்

இ) வாழ் ஈ) வாழ்த்துபவர்

**4. நடந்து சென்றான் (கட்டளை வாக்கியமாக மாற்றுக)**

அ) நடந்து செல் ஆ) நட

இ) நடந்து ஈ) நடத்தி

**5. புளியஞ்செடி (மரபுப்பிழை நீக்குக)**

அ) புளியங்கன்று ஆ) புளியமரம்

இ) புளியந்தோப்பு ஈ) புளியந்தோட்டம்

**6. எங்கிருந்து வர்றீங்க? (பிழை நீக்கி தூய தமிழில் எழுதுக)**

அ) எங்கிருந்து வாரீங்க? ஆ) எங்கேயிருந்து வர்றீங்க?

இ) எங்கிருந்து வருகிறீர்கள் ஈ) எங்கேயிருந்து வாரிங்க?

**7. அன்னமய்யா, "தம்பி, குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான் (அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக)**

அ) அன்னமய்யா தமிபியிடம், குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா என்று கேட்டான்.

ஆ) குடிக்கத்தண்ணீர் தருமாறு அன்னமய்யா தமிபியிடம் கேட்டான்.

இ) தண்ணீர் கிடைக்குமா என அன்னமய்யா தம்பியிடம் கேட்டான்.

ஈ) இவை மூன்றும் அல்ல.

***8. காலையில் எழுந்து படி (தகுந்த நிருத்தற்குறியிடுக)***

*அ) காலையில் எழுந்த படி.* *ஆ) காலையில் எழுந்து படி*

*இ) காலையில் எழுந்து படி* *ஈ) இவை முன்றும் அல்ல.*

***9. அந்த ரோடு வழியாகச் சென்றான் (பிறமொழிச் சொல் நீக்கி எழுதுக)***

*அ) அந்த வீதி வழியாகச் சென்றான்.*

*ஆ) அந்தச் சாலை வழியாகச் சென்றான்*

*இ) அந்த ரோடு சைடு சென்றான்*

*ஈ) இவை மூன்றும் அல்ல.*

***10. ஆடினான் பாடினான் (வினையெச்சத்தொடராக்குக)***

*அ) பாடினான் ஆடினான்* *ஆ) ஆடிப் பாடினான்*

*இ) ஆடிப்பாடி* *ஈ) எதுவுமில்லை*

***11. பாய்ந்தது காவேரி (பெயரெச்சத்தொடராக்குக)***

*அ) பாய்ந்த காவேரி* *ஆ) பாய்ந்து காவேரி*

*இ) காவேரி பாய்ந்தது* *ஈ) காவேரி பாய்ந்ததா?*

***12. கண்ணன் நீந்துகிறான் (விளித்தொடராக்குக)***

*அ) நீந்தினான் கண்ணன்* *ஆ) கண்ணா நீந்து!*

*இ) கண்ணன் நீந்தினான்* *ஈ) கண்ணன் நீந்து.*

***13. பால் பருக்கினான் (வேற்றுமைத் தொகாநிலைத் தொடராக்குக )***

*அ) பருகினான் பாலை* *ஆ) பால் பருகு*

*இ) பாலைப் பருகினான்* *ஈ) பால் பருகினானா?*

***14. கந்தன் வந்தான் (வினைமுற்றுத் தொடராக்குக)***

*அ) வந்தான் கந்தன்* *ஆ) வந்த கந்தன்*

*இ) வந்தானா கந்தன்* *ஈ) எதுவுமில்லை.*

***15. சிரித்துப் பேசினர் (வினைமுற்றுத் தொடராக்குக)***

*அ) சிரித்துக்கொண்டே பேசினர்* *ஆ)கலகலவெனப் பேசினார்*

*இ) சிரித்துச் சிரித்துப் பேசினார்* *ஈ) சிரிக்க வைத்துப்பேசினர்*

***16. மிகச் சிறந்தது (அடுக்குத்தொடராக்குக)***

*அ) நன்றாக இருந்தது* *ஆ) சிறந்தது*

*இ) சாலச் சிறந்தது* *ஈ) மிகவும் சிறந்தது*

Next Generation School

## இலக்கணக் குறிப்பு தருக

**1. பிரிந்து**

அ) வினைத்தொகை ஆ) விளி

இ) வினையெச்சம் ஈ) உரிச்சொல்

**2. உரைத்த**

அ) பெயரெச்சம் ஆ) வேற்றுமைத்தொகை

இ) விளி ஈ) இரட்டைக்கிளவி

**3. எழுதுதல்**

அ) பண்புத்தொகை ஆ) தொழிற்பெயர்

இ) வினைத்தொகை ஈ) பெயரெச்சம்

**4. பொழிந்த**

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

**5. பாணன் பாடினான்**

அ) எழுவாய்த் தொடர் ஆ) வினைத்தொகை

இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

**6. கடி மணம்**

அ) உவமைத்தொகை ஆ) அன்மொழித்தொகை

இ) உரிச்சொல் ஈ) பண்புத்தொகை

**7. வருக! வருக!**

அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை

இ) விளி ஈ) அடுக்குத்தொடர்

**8. கேட்டகாத ஓவியம்**

அ) வினைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம்

இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

**9. இவர் கவிஞர்**

அ) எழுவாய்த் தொடர் ஆ) விளித்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

**10. அடித்த சிறுவன்**

அ) வினையெச்சத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) வினைமுற்றுதொடர் ஈ) விளித்தொடர்

***11. கிளியே பேச!***

*அ) விளித் தொடர்* *ஆ) பெயர்ச்சொல்*

*இ) வினைமுற்றுத்தொடர்* *ஈ) பெயரெச்சத்தொடர்.*

***12. பாம்பு பாம்பு***

*அ) இரட்டைக்கிளவி* *ஆ) அடுக்குத்தொடர்*

*இ) உரிச்சொல் தொடர்* *ஈ) இடைச்சொல் தொடர்*

***13. மாமழை***

*அ) இடைச்சொல் தொடர்* *ஆ) விளித்தொடர்*

*இ) உரிச்சொல் தொடர்* *ஈ) பெயரெச்சத்தொடர்*

***14. பாடினான் தாலாட்டு***

*அ) வினையேச்சத்தொடர்* *ஆ) பெயரெச்சத்தொடர்*

*இ) விளித்தொடர்* *ஈ) வினைமுற்றுத்தொடர்*

***15. அறிஞரது நூல்***

*அ) உரிச்சொல் தொடர்*

*ஆ) வேற்றுமைத்தொகாநிலைத்தொடர்*

*இ) வேற்றுமைத்தொகை*

*ஈ) வினைத்தொகை*

***16. நீந்தி வந்தனர்***

*அ) பெயரெச்சத்தொடர்* *ஆ) வினையெச்சத்தொடர்*

*இ) வினைமுற்றுத்தொடர்* *ஈ) வினைச்சொல்*

# திருக்குறள்

## சிறுவினா

**1. வேலோடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலோடு நின்றான் இரவு**
**-குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக**

**உவமையணி**

**அணி இலக்கணம் :**

உவமானமும் உவமேயமும் தனித்தனியே கொடுக்கப்பட்டு இடையில் போல என்ற உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமை அணியாகும்.

**உவமை:**

வேல் ஏந்திய கள்வன் வழியில் போவோரைக் கொடு எனக் கேட்பது

**உவமேயம்:**

செங்கோல் ஏந்திய அரசன் குடிகளிடம் பொருள் கேட்டல்.

**உவமஉருபு:** போலும்

**பொருத்தம்:**

செங்கோல் ஏந்திய அரசன் குடிகளிடம் பொருள் கேட்பதற்கு, கள்வன் வழியில் போவோரைக் கொடு எனக் கேட்பதற்கு உவமையாய்க் கூறப்பட்டுள்ளது.

**2. ஒழுக்கமுடைய அதிகாரம் கூறும் ஒழுக்கங்கள் யாவை?**

- ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தரும்
- ஆதலால் ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாகப் பேணிக் காக்க வேண்டும்.
- ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர்.
- ஒழுக்கம் தவறுபவர் அடையக் கூடாத பழிகளை அடைவர்.
- உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதவர். பல நூல்களைக் கரற்றாராயினும் அறிவு இல்லாதவரே.

**3. பெரியாரைத் துணைக்கோடல் எவ்வாறு ?**

- கிடைத்தற்குரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் ஆகும்.
- குற்றங் கண்ட இடத்துக் கூறும் பெரியாரைத் துணை கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன், பஹைவர் இன்றியும் தானே கெடுவான்.
- தானொருவனாக நின்று பலரோடு பகைமேற் கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது நற்பன்புடையோரின் நட்பைக் கைவிடுதலாகும்.

4. **அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்**

**பெருமை முயற்சி தரும் என்னும்**

**ஆள்வினை உடைமையில் வள்ளுவர் கூறும் கருத்து யாது?**

- ஒரு செயல் முடிப்பதற்கு இயலாதது என்று எண்ணிச் சோர்வு அடையாதிருக்க வேண்டும்.
- அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.
- விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால்தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும்.

5. **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும்**

**என்னும் குறளின் மூலம் வள்ளுவர் கூறும் கருத்து யாது?**

- முயற்சி செத்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும்.
- முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையே வந்து சேரும்.